**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திரு. A.S. அமீர்தீன், B.A.,B.L.,L.L.M.,DJJJ.,Psy.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,(முழு கூடுதல் பொறுப்பு)

நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி.

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் சித்திரைத் திங்கள் 08 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 431/2022-ல்**

**அசல் வழக்கு எண்.14/2022**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, 55 மரவாக்காடு கிராமம், சித்தேரி, தோப்பு தெரு என்ற முகவரியில் வசித்து வரும் புறவி மகன் இந்து, சுமார் 50 வயதுள்ள குமாரசாமி .... மனுதாரர்/பிரதிவாதி

**// எதிர்//**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, 55 மரவாக்காடு கிராமம், சித்தேரி , தோப்பு தெரு என்ற முகவரியில் வசித்து வரும் நாகராஜ் மனைவி,இந்து, 38 வயதுள்ள மகாலெட்சுமி ....வாதி/எதிர்மனுதாரர்

இம்மனுவானது, கடந்த 21.07.2021 ம் தேதியில் மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரரவை ரத்து செய்து (Set-aside) உத்தரவிடக்கோரி உ.ந.ச.கட்டளை 9 விதி 7-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள் :- 29.09.2022**

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் :-** 03.11.2022

இம்மனுவின்மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு 03.11.2022 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று (24.03.2023) என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் **திரு. S. விஜயன், திரு.K.சிவசுந்தர் ஆகியோர்கள்** முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. P. ராதா** அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று(21.04.2023) இந்நீதிமன்றம் வழங்கும்.....

## <u>தீர்ப்பாணை உத்தரவு</u>

01. இம்மனுவானது கடந்த 21.07.2022 தேதி இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட மனுதாரருக்கு எதிரான ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. மனுதாரர்/பிரதிவாதி, எதிர்மனுதாரர்/வாதிக்கு ரூ. 500/-ஐ இவ்வுத்தரவு நாளிலிருந்து 1 மாதக்காலத்திற்குள் செலுத்தவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

2023 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

S/d.A.S.Ameerdheen.
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(மு.கூ.பொ)